## R5785 "To Serve, Not to be served"

# "ஊழியம் கொள்ளும்படியல்ல, ஊழியம் செய்ய"

*"மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாக, தம்முடைய ஜீவனை கொடுக்கவும் வந்தார்." (மத்தேயு 20:28)*

ஆண்டவர் தமது வார்த்தையை கேட்பவர்களிடம் தமக்கும் மற்ற மகாராஜாக்களுக்கும் உள்ள வித்தியாசத்தை பதிய வைத்துக் கொண்டிருந்தார். வேதாகம தீர்க்கதரிசன நிறைவேறுதலில் இஸ்ரயேலின் ராஜாவாயிருக்கும்படி அவர் வந்திருந்தார். அவர் உலக ராஜாக்களை போலல்லாமல், ஜனங்களிடம் எவ்வளவு பெறலாம் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்பாமல் ஜனங்களுக்கு எவ்வளவு செய்யலாம் என்று அறிய விரும்பினார். அவர் சுய நலமுள்ளவராக இருக்கவில்லை. அவர் மற்றவர்களிடமிருந்து எவ்வளவு அதிகமாக ஊழியம் பெறலாம் என்றும் மற்றவர்களுக்கு எவ்வளவு குறைவாக ஊழியம் செய்யலாம் என்றும் முயற்சி செய்யாமல், மாறாக, மற்றவர்களுக்கு எவ்வளவு அதிகமாக ஊழியம் செய்யலாம் என்றும், மற்றவர்களிடமிருந்து எவ்வளவு குறைவாக ஊழியம் பெறலாம் என்றும் முயற்சித்தார். தமது சீஷர்களும் இதையே செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறார். அவரும் அவரது சீஷர்களும் பரம அழைப்புக்கு, பரலோக ராஜ்யத்திற்கு என்று அழைக்கப்பட்டார்கள்; சுயநலமாக இருக்கவோ அல்லது தங்கள் சொந்த மனநிறைவுக்காக கனத்தை பெற்றுக் கொள்ளும்படியோ அழைக்கப்படவில்லை அவர்கள் ஊழியம் செய்ய அழைக்கப்பட்டார்கள். அதுவும் விசேஷமாக தேவனுடைய பிள்ளைகளின் ஊழியத்திற்காக அழைக்கப்படுகிறார்கள். ஊழியம் பண்ணுகிற ஊழியக்காரனுக்கு இதுவே சரியான பொருள்.

கர்த்தராகிய இயேசுவின் சீஷர்களாயிருக்கிற நாம் அனைவரும் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யவே அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை ஞாபகத்தில் வைப்பதே சரியானதாக இருக்கும். ஆவிக்குரிய காரியங்களில் ஊழியம் செய்கிறவர்கள், "ஊழியர்" என்ற பெயரில் விசேஷமாக அறியப்பட்டவர்கள், தாங்கள் ஊழியத்திற்கு என்று இருக்கிற அலுவலகம் என்றும், தங்களுக்கு அல்ல, பிறருக்கு ஊழியம் பண்ணுவதற்காக என்பதை மனதில் கொள்ள வேண்டும். இப்படி ஊழியம் பண்ணவே தங்களது ஜீவனை அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதையும் மனதில் வைக்கவேண்டும். யோர்தானில் இயேசு ஞானஸ்நானம் எடுப்பதற்கு முன் அவரது வாழ்க்கை குறித்து வேத வாக்கியங்கள் மிகக் குறைவாகவே கூறுகிறது. அவர் தமது ஜீவனை மற்வர்களுக்காக – அவரது நண்பர்களுக்காகவும், விரோதிகளுக்காகவும் – ஜீவனை கொடுத்தபோது; மூன்றரை சத்திய ஊழிய வருட காலப்பகுதி அதிக கவனத்தை ஈர்த்தது.

அவரது சீஷர்கள் அனைவருக்கும் இது உண்மையாக இருக்கிறது. நமது ஊழியம் நமது அர்ப்பணத்தில் ஆரம்பிக்கிறது. கர்த்தர் நமக்கு குறிப்பாக சொன்னதுபோல, நாம் பாதையில் நுழையும் வரை, நாம் ஊழியம் செய்யவோ, பரிசுத்த காரியங்களில் கிரியை நடப்பிக்கவோ நமக்கு அதிகாரம் கொடுக்கப்படுவதில்லை. எனினும் தற்போது நாம் ஊழியம் செய்ய ஆரம்பிக்கும் முன் முப்பது வயதை அடையும் வரை காத்திருக்க வேண்டியதில்லை. ஆனால் நாம் என்ன செய்யப்போகிறோம் என்பதையும் நாம் நமது ஜீவனை, கர்த்தருக்கும், அவரது சத்தியத்திற்கும் சகோதரர்களுக்கும் கொடுக்க வேண்டியிருக்கும் என்பதையும் தெளிவாக புரிந்து கொண்டு கொஞ்சம் முந்திய வயதிலேயே நாம் அர்ப்பணம் செய்யலாம். ஏனெனில் நாம் நியாயப் பிரமாணத்திற்கு கீழாக இல்லை. (ரோமர் 3:19)

### மனுஷகுமாரன் மட்டுமே மனிதனுடைய மீட்கும்பொருளாக ஊழியம் செய்ய முடியும்

நமது கர்த்தர் தம்மை மனுஷகுமாரன் என்றும், தான் "ஊழியம் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும்" வந்ததாகவும் கூறுகிறார். உண்மையிலேயே அவர் தேவகுமாரனாக இருந்தார். பூரண மனிதனாகிய ஆதாம் பாவத்தில் விழுவதற்கு முன்பு, அவர் ஒரு தேவ குமாரனாக இருந்தார். நமது கர்த்தர் தம்மை மனுஷகுமாரன் என்று கூறிக் கொள்வது, தாம் இனி ஆவியின் நிலையில் இல்லை என்பதையும் மனித நிலையில் இருப்பதை முக்கியப்படுத்தி கூறினார். அவர் பூமிக்கு வந்தது ஒரு விசேஷித்த நோக்கத்திற்காக, அவர் கூறியது போல ஊழியம் பண்ண, சேவை செய்ய, மனிதருக்கு தேவைப்படும் சேவையை அவர் ஆவியின் ஜீவியாக இருந்து கொண்டு அவரால் செய்திருக்க முடியாது. மனுக்குலத்திற்கு மீட்கும் பொருளைக் கொடுக்க அவர் மனிதனாக வேண்டியது தேவையாக இருந்தது. அவர் மனிதனாகித் தான் மனிதருக்கான மீட்கும் பொருளை கொடுக்க முடியும். பரிபூரணனை ஆதாமுக்கும் அவனால் ஜீவனை இழந்த மனுக்குலத்திற்கும் ஜீவனை விலைக்கிரயமாக வழங்குவதை அவர் பூரண மனிதனாகித்தான் செய்ய முடியும்.

"கண்ணுக்கு கண், பல்லுக்கு பல், மனித ஜீவனுக்கு மனித ஜீவன்" என்பது தெய்வீக பிரமாணத்தின் தேவையாக இருந்தது. ஆதாம் பாவம் செய்திருந்தான். அவன் சரீர பிரகாரமாக, மனதின் பிரகாரமாக ஒழுக்கத்தின் பிரகாரமாக புதுப்பிக்கப்படுவதற்கு முன்பாக மீட்கப்படவேண்டும் அல்லது அவன் தேவ கிருபைக்கு திரும்ப வேண்டும். இந்த முழு புதுப்பித்தலை சாத்தியமாக்குவதற்காக இயேசு வந்திருந்தார். மற்றவர்களது சேவைக்காக அவருடைய ஜீவன் அர்ப்பணிக்கப்பட்டது. இந்த மகா சேவையை அவரது சிலுவை மரணத்தில் நிறைவேற்றினார். அவரது அடிச்சுவட்டை பின்பற்றுகிறவர்களாகிய நமக்கு தமது பூமிக்குரிய வாழ்க்கை முழுவதும் சரியான வாழ்க்கைக்கான உயர்ந்த முன்மாதிரியை கொடுத்தார்.

### நமது சேவை குறிப்பாக புதுசிருஷ்டிக்காகவே

அநேகர் வேதாகமத்தை தவறாக புரிந்துகொண்டு, உலகத்தை மீட்பதற்கு இதுதான் நேரம் என்று நினைக்கிறார்கள். ஆகையால் அவர்கள் மனுக்குலத்தை உயர்த்தவும் ஆறுதல்படுத்தவும் தங்கள் நேரம் முழுவதையும் செலவழிக்கிறார்கள். அவர்கள் உண்மையிலேயே பாராட்டத்தக்க முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். ஏனெனில் ஒவ்வொரு நல்ல வேலையும் முயற்சியும் பாராட்டப்பட வேண்டும், தெய்வீக திட்டத்தைப்பற்றி சரியாக கூறுவது, தற்போது செய்யப்படவேண்டிய பெரிய வேலை. இந்த யுகத்தில் தேவனுடைய வேலை, உலகத்தை சீர்திருத்துவது அல்ல, ஆனால் புது சிருஷ்டியை அபிவிருத்தி செய்வது ஆகும். இந்த வேலை இன்னும் முடிவடையவில்லை. நாம் தேவனுடைய வேலையை செய்வோமானால், அது புது சிருஷ்டியைச் சார்ந்ததாக இருக்கவேண்டும். அப்போஸ்தலர் கூறுவது போல, நமக்குக் கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக, யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக் கடவோம்.

இந்த ஊழிய வேலையில் இயேசு இருந்தார். அப்பொழுது புது சிருஷ்டி இல்லாதிருந்தாலும், அவர் மாம்சத்தில் இருந்தபோது, புது சிருஷ்டியை உருவாக்குவது அவரது வேலையாக இருந்தது. அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றுகிற சிலரை கூட்டிச்சேர்ப்பதே அவரது வேலையாக இருந்தது. அவர்களுக்காகவும் உலகத்திற்காகவும் தமது ஜீவனை கொடுப்பது அவரது வேலையாக இருந்தது.

இயேசு தமது ராஜ்யத்தில் சிங்காசனத்தில் உட்காரும் பொழுது அவரது சீஷர்களில் இரண்டு பேர், ஒருவர் அவரது வலது பக்கத்திலும் ஒருவர் இடது பக்கத்திலும் உட்கார விரும்பியதை இந்த சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்கிறோம். இந்த விருப்பத்திற்காக அவர்களை அவர் கண்டிக்கவில்லை. ஆனால் அதைப் பெறுவது எவ்வளவு கஷ்டம் என்பதையும் தாம் பானம் பண்ணும் பாத்திரத்தில் அவர்கள் பானம் பண்ணக் கூடுமா என்று கேட்டார். அவர்கள் "கூடும்" என்றார்கள். அதை விரும்பினார்கள். அவர்களது பதில் அவருக்கு சந்தோஷமாக இருந்தது அவரது வார்த்தையிலிருந்து வெளிப்பட்டது. "என் பாத்திரத்தில் நீங்கள் குடிப்பீர்கள், நான் பெறும் ஸ்நானத்தையும் பெறுவீர்கள்." அவரது

ராஜ்யத்தில் அவரது அருகில் தங்களுக்கு இடத்தைக் கேட்டார்கள். அப்படிப்பட்ட இடத்தை அருளுவது தமது சித்தமல்ல என்றார். தமது கிருபையின்படி அல்ல, நீதியின்படி அது கொடுக்கப்படும். இவைகளை பிதாவானவரே வழங்குவார்.

## தேவையான நிபந்தனைகளை நாம் சந்திக்கிறோமோ?

ராஜ்யத்தில் நாம் எந்த இடத்தை பெறுகிறோம் என்பது நாம் ஊழியனாகவோ, சேவை செய்கிறவனாகவோ ஆவதைப் பொறுத்தே இருக்கிறது. மற்றவர்களிடமிருந்து முடிந்த அளவுக்கு நாம் அதிகமாக பெறவும், முடிந்த அளவுக்கு நாம் மற்றவர்களுக்கு குறைவாக கொடுக்கிறவர்களாக இருந்தால், கர்த்தர் தமது ராஜ்யத்தில் ஆளுகை செய்வதற்கு இப்படிப்பட்டவர்களை தேடவில்லை. இப்படியிருந்தால் நாம் ராஜ்யத்திலே இடம்பெற மாட்டோம். அவர் மிகவும் தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பாரை தேடிக் கொண்டிருக்கிறார். இந்த வகுப்பினர் அனைவரும் ஊழியர்களாக சேவை செய்வதில் சந்தோஷப்படுகிறவர்களாக, சகோதரர்களுக்கான ஊழியத்தில் தங்களது திறமைக்கும் சந்தர்ப்பத்திற்கும் தக்கவாறு தமது ஜீவனை கொடுப்பதை பெரிய சலுகையாக கருதுகிறவர்களாக இருப்பார்கள். ஏனெனில் சகோதரர்களுக்கு ஊழியம் பண்ணுவது தேவனுக்கு ஊழியம் பண்ணுவதாக இருக்கிறது. அவரிடத்தில் அர்ப்பணத்தில் தங்களை ஒப்புக் கொடுத்திருக்கிறார்கள். அவரிடம் தங்களது ஜீவனை அர்ப்பணிக்க வெளிப்படையாக அறிவித்திருக்கிறார்கள்.